ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1765/19 - 2012 ජූලි මස 06 වැනි සිකුරාදා - 2012.07.06
1765/19 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

**பாணந்துறை பிரதேச சபை**

பாணந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. எச். ஜகத் புஷ்ப குமார பெரேரா, மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால், மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென பாணந்துறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஹென்னதிகே ரஸிக பிரியங்க பீரிஸ் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் வெளிப்படுத்துகின்றேன்.

ரஸிக பீரிஸ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பாணந்துறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
களுத்துறை,
2012, யூலை 4.

7 - 595

---

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் பேருவளை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

அனுமதிபெறாது மூன்றுமாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக பேருவளை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

வெல்லப்புலி ஆரச்சிகே தொன் அஜன்த சானக எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், பேருவளை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. பியல் பன்துல குமார களுதரகே என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது பேருவளை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஹென்னதிகே ரஸிக பிரியங்க பீரிஸ் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. பியல் பன்துல குமார களுதரகே என்பவர் பேருவளை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ரஸிக பீரிஸ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பேருவளை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
களுத்துறை,
2012, யூன் 25.

7-596

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.